Written by - முருகபூபதி -
Tuesday, 17 December 2019 09:20 - Last Updated Thursday, 06 February 2020 11:05

"[illegible]"

இவ்வாறு பாரதி நூற்றாண்டு காலகட்டத்தில் இலங்கை வந்திருந்த இந்திய இசைமேதை எம்.பி. ஸ்ரீநிவாசன் (மானாமதுரை பாலகிருஷ்ணன் ஸ்ரீநிவாசன்) வீரகேசரி வாரவெளியீட்டிற்கு (20-12-1981) வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருக்கிறார். இவரை பேட்டிகண்டவர் வீரகேசரி பத்திரிகையாளர் சுபாஷ் சந்திரபோஸ்.

யார் இந்த ஸ்ரீநிவாசன்...?

ஒரு கால கட்டத்தில் சென்னையில் இடதுசாரி கலை இலக்கியவாதிகள் கூட்டாக இணைந்து தயாரித்து வெளியிட்ட பாதை தெரியுது பார் திரைப்படத்தின் இசையமைப்பாளர். இந்தப்படத்தில் சில காட்சிகளில் ஜெயகாந்தனும் வேண்டா வெறுப்பாக தோன்றி நடித்திருந்தார். எனினும் படத்தின் நீளம் கருதி அதனை சுருக்கும்பொழுது தான் வரும் காட்சிகளை ஜெயகாந்தன் நீக்கச்சொன்னார்.

ஜெயகாந்தனின் அருமை நண்பரான எம்.பி.ஸ்ரீநிவாசன், தமிழ், மலையாளம், வங்காளம் உட்பட சில இந்திய மொழிகளில் ஐம்பதிற்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு இசையமைத்திருப்பவர்.

ஜெயகாந்தனின் பாரிசுக்குப்போ நாவலில் வரும் நாயகன் சாரங்கன் வேறு யாருமல்ல - அவர் இந்த ஸ்ரீநிவாசன்தான் என்று விடயம் தெரிந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (வாசகர்கள் மீண்டும் ஒரு முறை பாரிசுக்குப்போ நாவலை படித்துப்பார்க்கலாம்)

Written by - [redacted]
Tuesday, 17 December 2019 09:20 - Last Updated Thursday, 06 February 2020 11:05



[redacted]

[redacted]